**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097135

1. District : மாவட்டம் Krishnagiri PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 9/AC/2018 Date: நாள் 04.12.2018

2. (i) Act சட்டம்: 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 9.11.2018/16.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 28.11.2018/10.15 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.12.2018 Time : நேரம் 04.12.2018/15.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 17.15 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Approximately 50 kms North
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Tamil Nadu Housing Board office Bagalur road, Hosur, Krishnagiri Dist.
(c) In case outside limit of this Police Station, then the Name of P S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Mohana
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Dr. P. Sugumaran
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 39 yrs
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Dentist/ Assistant Medical Officer
(g) Address : முகவரி Tamil Nadu Housing Board colony, Bagalur road, Hosur, Krishnagiri District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Annamalai, Assistant, Tamilnadu Housing Board office, Hosur, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 4/12/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 4/12/18.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.12.2018/09.45hrs

Name: பெயர் S. MURUGAN
Rank: நிலை Inspector of Police No./எண் ………

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/AC/2018 சட்டப்பிரிவு 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

இன்று 04.12.2018ம் தேதி மாலை 17.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பை சேர்ந்த சுகுமாரன் மனைவி மோகனா என்பவர் கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரிடம் கொடுத்த கணினி அச்சுப்பிரதி புகாரைப் பெற்று, புகாரின் உண்மை தன்மை குறித்து ஒரு முன் விசாரணை இரகசியமாக மேற்கொள்ளப்பட்டது. அதில், எதிரி திரு.அண்ணாமலை, உதவியாளர் என்பவர் கைது செய்யக்கூடிய குற்றம் புரிந்துள்ளார் என தெரியவந்ததால் அவர்மீது இன்று 04.12.2018ம் தேதி இரவு 20.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/AC/2018 ச/பி 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018 படி முதல் தகவலறிக்கை பதிவுசெய்யப்பட்டது. அந்த புகாரின் விவரம்: அனுப்புநர், டாக்டர். A. மோகனா, க/பெ Dr.P. சுகுமாரன், A-46/5, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, பாகலூர் ரோடு, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம், பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் என் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், சூளகிரியில் உதவி மருத்துவ அலுவலராக பணியாற்றிவருகிறேன். 03.07.2018ம் தேதி ஒசூரில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள Phase-VII பகுதயில் உயர்வருவாய் பிரிவில் ஒரு வீடு ஒதுக்குமாறு கேட்டு விண்ணப்பித்தேன். வீடு ஒதுக்கீடு செய்வதற்கான குலுக்கல் 06.09.2018ம் தேதி நடைபெற்று, அதில் என்னுடைய பெயரில் HIG-1/310 என்ற வீடு எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான உத்தரவு 07.09.2018ம் தேதியன்று எனக்கு வழங்கப்பட்டது. அந்த வீட்டின் மதிப்பு ரூபாய் 74,75,000/- ஆகும். அதற்கான முழு தொகையையும் தவணை முறையில் செலுத்தி, இறுதியாக ரூபாய் 1, 07,000/-ஐ 09.11.2018ம் தேதியில் ஒசூர்

வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில் செலுத்தினேன். அன்றே அந்த அலவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.அண்ணாமலை அவர்களை மாலை சுமார் 4.00 மணிக்கு சந்தித்து, சாவி கொடுப்பதற்கான உத்தரவை தயார்செய்து கொடுக்குமாறு கேட்டேன். அப்போது அவர், தனக்கு லஞ்சமாக ரூபாய் 2,000/- கொடுத்தால்தான் அந்த உத்தரவை தயார்செய்து, உரிய அலுவலரிடம் கையொப்பம் பெற்றுத்தருவதாக சொன்னார். நான் பிறகு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மீண்டும் 28.11.2018ம் தேதி சுமார் 10.15 மணிக்கு ஒசூரிலுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலகத்திற்கு சென்று உதவியாளர் திரு.அண்ணாமலை அவர்களை சந்தித்து எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டின் சாவி கொடுப்பதற்கான உத்தரவை பெற்றுத்தருமாறு கேட்டேன். அப்போது, அவர் அந்த உத்தரவை என்னிடம் கொடுத்துவிட்டு, தான் ஏற்கனவே கேட்ட ரூபாய் 2,000/-ஐ கொடுத்தால்தான் சாவி பெற்றுத்தர ஏற்பாடு செய்யமுடியும் என சொன்னார். நான் பிறகு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், மீண்டும் இன்று 04.12.2018ம் தேதி மதியம் சுமார் 3.30 மணிக்கு ஒசூரிலுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலகத்திற்கு சென்று உதவியாளர் அண்ணாமலை அவர்களை சந்தித்து, என்னுடைய வீட்டிற்கான சாவியை பெற்றுத்தருமாறு கேட்டேன். அப்போது அவர், தான் ஏற்கனவே கேட்ட பணம் ரூபாய் 2,000/-த்துடன் வந்து தன்னைப்பார்த்து கொடுக்குமாறும், அவ்வாறு கொடுத்தால்தான் எனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டின் சாவியை பெற்றுத்தர ஏற்பாடு செய்யமுடியும் என உறுதியாக சொல்லிவிட்டார். மேலும், வீட்டுசாவி கொடுக்கும்போது, சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கும் பணம் கொடுக்கவேண்டும் என்றும், அவர்கள் தற்போது அலுவலகத்தில் இல்லை என்றும் அவர் சொன்னார். நாளை வருவதாக நான் அவரிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அவருக்கு ரூபாய் 2,000/-ம், இதர அலுவலர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்தும் எனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டின் சாவி வாங்க எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்ட பணம் ரூபாய் 2,000/-த்துடன் நாளை அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட அண்ணாமலை என்பவர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxxxxx (மோகனா) 04.12.2018. முதல் தகவலறிக்கையின் அசலையும், புகாரையும் கனம் சிறப்பு நீதிபதி மற்றும்

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

04/12/18
Inspr. of Police
V&AC, Krishnagiri